ஐக்கிய அமெரிக்க தூதரகம்
கொழும்பு

# ஊடக செய்தி

**பொது விவகாரங்கள் பிரிவு**
**Tel: +94 (1) 249-8100 ● Fax: +94 (1) 244-9070**
**Email: shenjy@state.gov ● http://lk.usembassy.gov**

செய்தி இலக்கம் 20170406T

## கண்டியில் பெண் தொழில் முயற்சியாளர்கள் வியாபாரத்தை உருவாக்கவும் வளர்க்கவும் கற்றுக்கொண்டனர்:

கண்டி, ஏப்ரல் 6: மத்திய மாகாண பெண் தொழில் முயற்சியாளர்கள் ஊக்குவிக்கப்பட்டு, ஐக்கிய அமெரிக்க தூதரகத்தின் அனுசரணையுடன் கடந்த 2017, மார்ச் 30ம் திகதி கண்டி அமெரிக்க தகவல் கூடத்தில் நடைபெற்ற வர்த்தக கண்காட்சியில் அவர்களது உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன. பிரதேசத்தின் பல்வேறு சமூகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பெண்களுக்கான தொழில்முயற்சித்திறனை வழங்கும் ஐந்து மாத வேலைத்திட்டமொன்றின் ஒரு நிகழ்வாகவே இக்கண்காட்சி விளங்கியது.

பங்குபற்றுனர்களுக்கு ஆங்கில மொழிப்பயிற்சி, மற்றும் சந்தைப்படுத்தல், உற்பத்தி, சமூக ஊடகங்களின் பயன்பாடு மற்றும் வேறு வியாபார திறமைகள் என்பவற்றில் தீவிர பயிற்சிப்பட்டறைகள் இந்த இலவச வேலைத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டது. அதன் காரணமாக, அநேகமான பெண்கள் சிறு வியாபாரத்தை ஆரம்பித்துவிட்டார்கள் அல்லது ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

“ஒரு வளமான இலங்கையின் அதன் சகல பிரஜைகளுக்கும் சம சந்தர்ப்பம் என்னும் நோக்கத்திற்கு நாம் ஆதரவளிக்கின்றோம், அத்துடன் இந்நிகழ்ச்சியில் பங்குபற்றிய பெண்களுக்காக கைகளைத்தட்டி ஆதரவளிக்கிறோம் , பெண்கள் வெற்றியடையும்போது சமூகம் வெற்றியடைகின்றது.” என்று இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்க தூதுவர் அதுல் கேஷாப் கூறினார்.

பெண்கள் தன்னிறைவடைந்து அவர்களது குடும்பங்களுக்கு உதவுவதற்குத் தேவையான தகுதியையும் திறமையையும் வழங்கும் பொருட்டு பேராதனை பல்கலைக்கழகத்தின் கலாநிதி சோபனா இராஜேந்திரன் இப்பயிற்சித் திட்டத்தை வடிவமைத்து நடைமுறைப்படுத்தினார். மார்ச் 30ம் திகதி நடைபெற்ற வர்த்தக கண்காட்சி, அதில் பங்குபற்றியோருக்கு விவசாயப் பொருட்கள் , காகித உற்பத்திப் பொருட்கள், கைவினைப் பொருட்கள் அடங்கலாக அவர்களது வியாபாரப் பொருட்களை நிறுவன பிரதிநிதிகளுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் காட்சிப்படுத்தும் சந்தர்ப்பத்தை வழங்கியது.

“வெற்றிகரமான தொழில் முயற்சியாளர்களாக உருவாகுவதற்குத் தேவையான நம்பிக்கையையும் திறன்களையும் அபிவிருத்தி செய்வதற்கு சிறப்பான திறமைகளைக்கொண்ட ஒதுக்கப்பட்ட பெண்களுக்கு இத்திட்டம் உதவியது. சிலர், மிகக்குறுகிய காலவரையரைக்குள் தங்களது உற்பத்திகளை சர்வதேச சந்தைக்கு கொண்டு வரக்கூடியதாக இருந்தது” என்று கலாநிதி இராஜேந்திரன் குறிப்பிட்டார்.

பெண்களையும் சிறுமிகளையும் வலுவூட்டுவதற்கு ஐக்கிய அமெரிக்காவிற்கு உறுதியான பொறுப்புள்ளது. சர்வதேச பெண்களின் பிரச்சனைகளுக்கான ஐக்கிய அமெரிக்க ராஜாங்க காரியாலயம் தொடர்பாக அறிந்துகொள்வதற்கு: https://www.state.gov/s/gwi/



தலைப்பு: கண்டி அமெரிக்க தகவல் கூட தொழில்முயற்சியாளர் பெண்கள் வர்த்தக கண்காட்சி ஆரம்பிப்பதற்கு முன்னர் பெண் தொழில் முயற்சியாளர்கள் மங்கள விளக்கேற்றுகின்றனர்.



தலைப்பு: பெண்கள் வர்த்தக கண்காட்சி ஆரம்பத்தின்போது ஐக்கிய அமெரிக்க தூதரக கொழும்பு உதவி தகவல் அதிகாரி ரேச்சல் ஓ' ஹாரா ஒரு இளம் தொழிலதிபரால் வரவேற்கப்படுகின்றார்.



தலைப்பு: கண்டி உதவி ஆணையாளர் தலீபா ருபானீ பியதாச பெண்களின் வர்த்தக கண்காட்சியை ஆரம்பிப்பதற்கு நாடாவை வெட்டுகிறார்.



தலைப்பு: கண்டி அமெரிக்கன் கோணர் தொழில்முயற்சியாளர் பெண்கள் வர்த்தக கண்காட்சியில் ஒரு கைவினைப்பொருட்கள் கடை பார்வையாளர்களை கவர்ந்துள்ளது.



தலைப்பு: பெண் தொழில்முயற்சியாளர்களின் வர்த்தக கண்காட்சியில் கைகளால் செய்யப்பட்ட சாவிக்கோர்வைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.